பிரச்னை எழவில்லை. 1,040 இருக்கைகள் உள்ளன. அதைத் தான் அங்கு வழங்க முடியும். அது தவிர வேறு ஏதாவது குறைகள் இருப்பதாகக் குறிப்பிட்டுச் சொன்னால் அதை உடனடியாகக் களைய முயற்சி எடுக்கப்படும்.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : இந்த கலைவாணர் அரங்கின் மூலம் ஆண்டு ஒன்றுக்கு அரசுக்குக் கிடைக்கும் வருமானம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இதற்கான விடையை இதற்கு முன்பே நான் சட்டமன்றத்தில் தெரிவித்திருக்கிறேன். ஒரு ஐந்தாண்டுக் காலக் கணக்கு என்னிடம் இருக்கிறது.

1974–75-ல் ரூ. 5,559 லாபம் வந்திருக்கிறது.

1975–76-ல் ரூ. 47,253 லாபம் வந்திருக்கிறது.

1976–77-ல் ரூ. 46,804 நஷ்டம்.

1977–78-ல் ரூ. 9,558 லாபம்.

1978–79-ல் ரூ. 2,61,096 லாபம்.

[முற்பகல் 9-20]

திரு. சென்னை மு. அரங்கநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே,

* * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். கேள்வி கேட்கிறபோது, விவரங்களைத் தான் கேட்க வேண்டும். உறுப்பினர் அவர்கள் தனிப்பட்டவர் ஒருவர் புண்படுகின்ற முறையில் கேள்வி கேட்கக் கூடாது. உட்காருங்கள்.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அனுமதி இல்லை என்கிறேன். உட்காருங்கள்.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.